# விலைமனுக்களுக்கான அழைப்பு

**மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம்**

**வனசீவிகள் பாதுகாப்பு திணைக்களம்**

## சிறிய குளங்கள் மற்றும் பணியாளர் குழாம் மற்றும் பூங்காவிற்கு வருகைதருபவர்களின் நீர் வழங்கலுக்காக ''யாலவில்'' 4" பிவிசி குழாய் பதித்தல் (1 ஆம் கட்டம் - 9 கி.மீ.)

**ஒப்பந்த இல.: LK-ESCAMP-DWC-117577-CW-RFB**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் பின்வரும் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பத்தரமுல்ல, 82 ஆம் இலக்கத்திலுள்ள மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் - ESCAMP – செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது அவசர நிகழ்வுகள் மற்றும் பெசேவ நீங்கலாக 53.98 மில்லியன் ரூபாவாகுமென்பதுடன் வேலைகளின் முழுமையான பூர்த்தி செய்தலுக்கான காலம் 90 நாட்களாகும். அளவை அளவையிடலின் பிரகாரம் இப்பணியானது நீண்ட குழிகளின் அகழ்வு, பிவிசி குழாய்வரிசை பதித்தல், ஆள்செல் துவாரங்கள் அமைத்தல் மற்றும் நீண்ட குழிகளை மூடுதல் ஆகியனவாகும்.

2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நெடுஞ்சாலை நிர்மாணத்தில் சி-4 அல்லது மேற்பட்ட தரத்தில் CIDA (முன்னைய ICTAD) உடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

3. ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்வதற்கான தகைமைக்காக தேவைப்படும் தகைமை தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு.
   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பின்
   - வருடாந்த சராசரி பெறுமதி ஆகக் குறைந்தது 38 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - கடந்த 05 வருடங்களில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு வேலைகளுக்கு
   - நிகரான இவ்வாறான தன்மை மற்றும் சிக்கல்தன்மையுடன் ஆகக் குறைந்தது இரு ஒப்பந்தங்களை நிர்மாணித்த அனுபவம் (இந்த தேவைப்படுத்தலுக்கு அமைந்தொழுகுவதற்காக மேற்கோள் காட்டப்படும் வேலையானது ஆகக் குறைந்தது 70% பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
   - பணிக்காக ஒதுக்கப்படும் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ பணிக்குழுவினர்
   - பின்வருமாறு: சிவில் பொறியியலில் பெற்ற விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது NDT அல்லது நிகரான வேலைகளில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவத்துடன் நிகரான 5 வருட அனுபவம்
   - ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகள் நீங்கலாக ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட
   - எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக ஆகக் குறைந்தது திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் பெறுமதி 5.5 மில்லியன் ரூபாவிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் தரவின் 4.3 வழங்கப்பட்டுள்ள மிகஅவசியமான உபகரணங்களின்
   - பட்டியல் (சொந்தமான, குத்தகைக்கு, வாடகைக்கு இன்னும் பலவும்) ஒன்றைக் கொண்டிருத்தல் அல்லது /மற்றும் சரியான நேரத்தில் சுவீகரிப்பு மற்றும் உரிமையாக்கல் முன்மொழிவுகள்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, ஜயந்திபுர வீதி, 811/ஏ, வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்று (தொலைபேசி: 011 2888585, தொலைநகல்: 011 2883355, மின்னஞ்சல்: dg@dwe.gov.lk ) 2019.12.16 ஆம் திகதி வரையும் வார நாட்களில் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீசிக்கலாம்.

5. ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 14,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், 2019.12.16 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு, ESCAMP, பெறுகைப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.

6. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2019.12.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

7. அனைத்து விலைமனுக்களும் 540,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட முகவரி பின்வருமாறு:

**தலைவர்,**<br>
**செயற்றிட்ட பெறுகைக் குழு - ESCAMP,**<br>
**மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,**<br>
**செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு,**<br>
**இல.: 82, ரஜமல்வத்த வீதி,**<br>
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011 2888426/011 2888427**<br>
**தொலைநகல்: 011 2888577**